பள்ளியைப் பொறுத்த வரை அவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 60 ஆகும். ஓய்வு பெறும் வயதை மாற்றியமைக்கும் செயற் குறிப்பு எதுமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Pension to Teachers

* 249 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether a Secondary Grade teacher with over ten years of service, is eligible for pension, when retiring as a member of the Non-teaching staff after further years of such service from the same Aided High School ; and

(*b*) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) ஆசிரியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்குப் பொருந்தாது.

Government Arts and Crafts Institutions

* 250 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of diploma holders who passed out of the Government School of Arts and Crafts during 1966–67 and 1967–68 ; and

(*b*) among them, the number of persons who are employed ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) சென்னையில் கலை, கைத் தொழிற் கல்லூரி ஒன்றும், கும்பகோணத்தில் கலை, கைத்தொழிற்பள்ளி ஒன்றும் ஆக அரசாங்கக் கலை, கைத்தொழில் நிலையங்கள் இரண்டு உள்ளன. சென்னையிலுள்ள கலை, கைத்தொழிற் கல்லூரியிலிருந்து 1967–ல் 41 பேரும் 1968-ல் 57 பேரும், 'டிப்ளொமா' பெற்றுத் தேர்ச்சி யடைந்தனர். கும்பகோணம் கலை, கைத்தொழிற் பள்ளியைக் கும்பகோணம் நகராட்சியிடமிருந்து, அரசாங்கம் மேற்கொண்டு இன்னும் ஐந்து ஆண்டு கள் முடிவு பெறாத காரணத்தால் இதுவரை இப் பள்ளியிலிருந்து 'டிப்ளொமா' பெற்று எவரும் வெளிவரவில்லை.

(இ) இது குறித்துத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

Fee Concession

* 195 *Q.*—THIRU M. AIYASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the method adopted for granting fee concession to the sons and daughters of the Non-Gazetted Government Officers in the Pre-University Classes ;

(*b*) whether it is a fact that fee-concession is allowed only from the date of receipt of the N.G.O. Certificate by the college authorities ; and

(*c*) if so, the reasons therefor ?